24 SEP 1997
ஊரிய நடவடிக்கைக்காக
ஆணையாளர்

Public Library
Hindu lodge
Nallur

செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

உதயதாரகை

கிறிஸ்தவ வாரப் பத்திரிகை

மலர்: 153 ஆரம்பம்: 1841 வெள்ளிக்கிழமை 19 - 9 - 1997 இதழ்: 20

பொது தன நூலகம்
SEP 1997
மானகீரராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

'கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவ ஊற்று; அதினால் மரணக் கண்ணிகளுக்குத் தப்பலாம்'

நீதிமொழிகள் 14. 27

நன்றி நவிலும் வழிபாடு

அமரர். அருள்திரு. இன்னாசி அருள்பாலன் அவர்களின் வாழ்வுக்கும், திருப்பணிக்கும் நன்றி செலுத்தி உடுவில் தென்னிந்தியத் திருச்சபையில் 14 - 09 - 97 மாலை 3.30 மணியளவில் ஒரு சிறப்பு வழிபாடு நடாத்தப்பட்டது.

இவ்வாராதனையை உழியர் சங்கச் செயலாளர் அருள்திரு. ஜீ. ராஜ்குமார் நடாத்தினார். வேதப் பாடங்களை சகோ. பி. தேவராஜா, திருமதி அருள்ஜோதி ஆகியோர் வாசித்தனர். சாட்சி யுரையை இறையியல் கல்லூரிக் காப்பாளர் அருட்திரு டி. ஆர். அம்பலவாணர் வழங்கினார்.

உடுவில் மகளிர் கல்லூரியினர் சிறப்புப்பாடல் ஒன்றைப் பா னர். அருளுரையை பேராயர் அதிவண கலாநிதி எஸ். ஜெபநே சன் நிகழ்த்தினார்.

அருட்திரு எஸ். சி. ஆர்ணல்ட் அவர்கள் விசேட ஜெபங்களை ஏறெடுத்தார். பேராயர் அதி வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்களின் ஆசீர்வாதத்துடன் வழிபாடு நிறைவெய்தியது.

கோணாவில் தென்னிந்திய திருச்சபையினது தேவஊழியராக கடமையாற்றிய அருள்திரு. ஐ. அருள்பாலன் அவர்கள் அண்மையில் அகாலமரணமடைந்தது நாம் அறிந்ததே. இவர் எமது ஆதீனத்தில் செய்த பணிகளை நினைவு கூர்ந்து அதற்காக இறைவனுக்கு நன்றிசெலுத்தும் வண்ணமாகவே இவ்வழிபாடு நடாத்தப் பட்டது.

நல்லூரில் இன்று அடையாள உண்ணாவிரதம்

நல்லூர் கந்தசாமி ஆலயம் முன்பாக இன்று அடையாள உண்ணாவிரதம் ஒன்றை நடாத்த ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. குடாநாட்டில் கைது செய்யப் பட்டு, இதுவரை தகவல் தெரியாதுள்ளவர்களின் தகவல்களை வெளியிடக்கோரியும், இதைக் குறித்துப் பேச ஜனாதிபதியைச் சந்தர்ப்பம் வழங்கக் கோரியும் இந்த உண்ணாவிரதத்தினை காணாமற்போனவர்களின் பெற்றோர், பாதுகாவலர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இப்போராட்டம் வெற்றி அளிக்காவிடில் யாழ். செயலகம் முன்பு மறியல் போராட்டம் நடாத்தப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். மகஜர்களும் அனுப்ப ஏற்பாடாகியுள்ளது.

அரசு - புலிகள் போர்நிறுத்தம்

எதிர்வரும் அக்டோபர் மாதம் 10ஆம், 11ஆம் திகதிகளில் போலியோ தடுப்பு மருந்து வழங்கப்படும் தினங்களான படியால் போர்நிறுத்தம் செய்வதற்கு அரசும் புலிகளும் இணங்கியுள்ளதாகத் தெரிகிறது. சென்ற மாதமும் இது நடைமுறைப்படுத்தப் பட்டது தெரிந்ததே.

படுகொலை குறித்த கண்டன அலைகள்

கிளிநொச்சி மாவட்டத்தின் கோணாவில் பகுதியில் திருச்சபைப் போதகராகக் கடமையாற்றிய தென்னிந்தியத் திருச்சபைப் போதகர் அருள்திரு. இன்னாசி அருள்பாலன் அவர்கள் படுகொலை செய்யப்பட்டது யாவர் மத்தியிலும் அதிர்ச்சியையும் வேதனையையும் பரவ விட்டுள்ளது. தாங்கொணா அதிர்ச்சியில் கண்டன அறிக்கைகளும், வெளியாகிக்கொண்டு இருக்கின்றன. இந்த அறிக்கைகளில் இந்தக் கொடூர கொலை குறித்து அனேகர் தமது கண்டனங்களை வெளியிட்ட வண்ணம் உள்ளனர்.

திருச்சபையின் கண்டனம்

தென்னிந்தியத் திருச்சபையின் கொழும்புக் குரு அருள்திரு ஏ. ஜெயகுமாரன் இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:-

''கிளிநொச்சி மாவட்டத்தின் கோணாவிலில் கடமையாற்றிய எமது மதகுருமாரில் ஒருவரான வண. அருள்பாலனின் கொலைச் சம்பவம் தொடர்பாகத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் திருச்சபைப் பண்ணைக்குச் சென்ற சமயம் கடந்த மாதம் 25ம் திகதி வண. அருள்பாலன் இராணுவத்தால் கைது செய்யப் பட்டார். இதனை அப்பகுதியில் பணியாற்றும் எமது மதகுருமார்களில் ஒருவர் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக 28-8-97 இல் நாங்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் தொடர்பு கொண்டபோது, அது வழமையான சோதனை நடவடிக்கை யென எமக்கு அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக நாங்கள் உடனடியாகவே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அறிவித்தோம். ஆனால், வண. அருள்பாலனின் சடலம் புது முறிப்பில் கடந்த 9ம் திகதி கண்டெடுக்கப் பட்டுள்ளதாக செஞ்சிலுவைச் சங்கம் கடந்த 12ம் திகதி எமக்கு அறிவித்துள்ளது.

சமாதானத்தை ஏற்படுத்தவும், பொது மக்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கும் தாங்கள் முயற்சிகள் மேற்கொள்ளும் இத் தருணத்தில் மதகுரு ஒருவர் கொல்லப்படும் இத்தகைய சம்பவம் வருந்தத்தக்கதாகும். அத்துடன் மன்னிக்கவே முடியாததுமாகும்.

நாட்டின் தலைவி என்ற வகையில் இச் சம்பவம் தொடர்பாக முறையீடு செய்வதற்குத் தங்களைத் தவிர எமக்கு வேறு எவருமில்லை. இம் மதகுருவின் கொலை தொடர்பாக முழுமையான விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்'' இவ்வாறு அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

உலக தேவசபையின் கண்டனம்

உலக தேவ சபையின் உறுப்பினரும், தேசிய கிறிஸ்தவ சபையின் செயலாளருமான அதி.வண. டானியல் தேவானந்தன் 'வண. அருள்பாலனின் கொலை தொடர்பாக நீதி விசாரணை நடத்த வேண்டும்' என இலங்கை ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார். இது குறித்து நீதி விசாரணை ஆணைக்குழு ஒன்றை அமைக்க உலக தேவ சபை கோரும்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்து மாமன்றத்தின் கண்டனம்

தென்னிந்தியத் திருச்சபைப் போதகர் வண. ஐ. அருள்பாலனின் கொலை தொடர்பாக அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்திருக்கும் அகில இலங்கை இந்து மாமன்றம் 'தமிழர்' என்ற காரணத்துக்காக தமிழ் மக்கள் மீது இடம்பெறும் இத்தகைய இன்னல்களை நிறுத்தி, இத்தகைய நிலைக்கு நிவாரணம் காண்பதற்குத் தேவையான நடவடிக்கையையும் உடனடியாக மேற்கொள்ளுமாறு இலங்கை ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது

அகில இலங்கை இந்துமா மன்றத்தின் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள

வன்னிப்பிராந்திய பொன்விழா!

மேற்படி நிகழ்வானது 12 - 08 - 1997இல் காலை எட்டுமணியளவில் அக்கராயன் அம்பலப்பெருமாள் சந்தியில் இருந்து சாட்சிப் பவனியுடன் ஆரம்பமானது. வன்னிப் பிராந்தியத்தில் உள்ள சபைகளான விசுவமடு, ஜெயபுரம், சமாதானபுரம், கிளிநொச்சி, பாரதிபுரம், முறிகண்டி, மாங்குளம், வன்னிவேளாங்குளம், அன்புபுரம், சலோம்நகர், கோணாவில், கல்மடுக்குளம் ஆகிய சபைகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் வெகுதூரத்தில் இருந்து வந்து இதிலே கலந்து கொண்டார்கள். இச்சாட்சிப் பவனியிலே ஏறக்குறைய 1000 பேர் பங்கேற்றனர். குறிப்பாக 800 பிள்ளைகள் கலந்து கொண்டமையானது சிறுவர் விழா போலவும் காட்சி அளித்தது.

சாட்சிப் பவனியைத் தொடர்ந்து பரிசுத்த நற்கருணை ஆராதனை ஆரம்பமானது. இது அருட்திரு ஈ. என் லோறன்ஸ் அவர்களினால் நடாத்தப்பட்டது. அருளுரை அருட்திரு எஸ். அன்ரனி சவரிமுத்து அவர்களினால் ஆற்றப்பட்டது. 96 ஆம் சங்கீதம் 1 - 3 வசனங்களை ஆதாரமாகக் கொண்டு ஆரம்பித்து 20ஆம் நூற்றாண்டிலே இடம்பெற்ற நிகழ்வுகளில் ஒருமைப்பாடு முக்கியமான விடயம் எனவும் அதிலே குறிப்பாக தென் இந்திய திருச்சபையாழ் திருமண்டலம் 27 - 09 - 1947 இல் ஐக்கியமான தன்மையை விலக்கி இறுதியிலே பரி. யோவான் 17:21ஆம் வசனத்தின் ஊடாக கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டிய விடயம் பற்றி விளக்கம் அளித்தமையானது அருளுரையின் செம்பொருளை புரிந்து கொள்ளக் கூடியதாக அமைந்தது.

இவ் ஆராதனையிலே முதலாம் வேதப்பாடத்தை அருட்திரு டி. போல்சுரேசும், இரண்டாம் வேதப்பாடத்தை அருட்திரு ஜி. டி. மைனசீலனும், நற்செய்திப் பாடத்தை அருட்திரு ஆர் ஜோன்செல்வமும் வாசித்தார்கள் மன்றாட்டு செபத்தை அருட்திரு ஐ. அருள்பாலன் ஏறெடுத்தார்.

அருட்திரு ஈ என். லோறன்ஸ் அவர்களின் குழந்தை கிறிஸ்ரினாவிற்கு ஞானஸ்நானம் அருட்திரு எஸ். அன்ரனி சவரிமுத்தினால் வழங்கப்பட்டது. இவ்வாராதனையிலே ஏறக்குறைய 1500 பேருக்கு மேல் கலந்து கொண்டமை ஆனது ஆராதனையை மேலும் சிறப்பித்தது. குறிப்பாக சமாதானபுர சபையின் ஆலயக்கட்டிடத்தை விஸ்தரிக்கும் நோக்குடன் 80' நீளமும் 19' அகலமும் உள்ள இரு பகுதிகள் பெருப்பிக்கப்பட்டதுடன் முன்பக்க முகப்பும் சற்று பெருப்பிக்கப்பட்டது இதனால் அநேக மக்கள் இவ்வாராதனையிலே பங்குபெற்றக் கூடியதாக அமைந்தது.

ஆராதனையைத் தொடர்ந்து அருட்திரு ஈ. என். லோறன்ஸ் அவர்களின் தலைமையிலே பொதுக் கூட்டம் ஆரம்பமானது. இதிலே அரச சார்பற்ற நிறுவனங்களின் கிளிநொச்சி மாவட்ட தலைவர் திரு பொ விநாயகமூர்த்தி உரையாற்றும்போது சபையின் பணியைப் பாராட்டியதுடன் மேன்மேலும் இப்பணி தங்குதடையின்றி யாவருக்கும் கிடைக்க வேண்டுமெனக் குறிப்பிட்டார். கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரி இராசநாயகம் தனது உரையிலே கடந்த காலத்தில் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியிலே எவ்வண்ணம் சபை சேவை புரிந்ததோ அதேபோல இவ் நெருக்கடியான காலகட்டத்திலும் சபை தன் சேவையைத் தொடர வேண்டும் என்றதுடன் கல்வி கற்க வாய்ப்பின்றி வாழும் பிள்ளைகள் தமது கல்வியைத் தொடர வாய்ப்பளிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

தமிழர் புனர்வாழ்வு கழகத்தைச் சேர்ந்த இ. ரவி உரையாற்றுகையில் இன்று வன்னிப் பிராந்தியத்திலே இடம்பெறும் இந்நிழ்வானது பல விடயங்களுக்கு அடையாளமாக அமைகிறது. தற்கால நெருக்கடியான சூழ்நிலையிலும் சபை தனது பணிகளைத் தொடருவதுடன் குறிப்பாக வன்னியிலே 60,000பிள்ளைகள் கல்வி கற்க முடியாத நிலையில் உள்ளனர். இப்பிள்ளைகள் தம் கல்வியைத் தொடர சந்தர்ப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

மனித முன்னேற்ற நடுநிலைய கிளிநொச்சிப் பகுதி செயலாளர் ஈ. கணேசபிள்ளை தமது உரையிலே கடந்த காலத்திலே விறு விறுப்புடன் இடம்பெற்ற பணிகள் இப்போது சற்று மந்த கதியில் உள்ளது. சேவை செய்வதற்கு இதுதான் ஏற்றகாலம். ஆகவே சபை தனது சேவைகளை தொடர்ந்தும் நடத்துவதுடன் எமது மக்களின் வாழ்விற்காக, உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டும் என்றார். பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வு கழகத் தலைவர் பொ தங்கராசா தம் உரையில் செய்ய வேண்டிய நேரத்தில் செய்வது தான் உகந்தது அதேபோல இன்னும் செய்வதற்கு அநேக காரியங்கள் உண்டு அதனையே சபை செய்ய வேண்டும் என்றார்.

அக்கராயன் குளம் வைத்தியசாலை வைத்திய கலாநிதி எஸ் எவ் அருள்நேசன் தமது உரையிலே அபயம் அளிக்கும் இடம்தான் திருச்சபை, கடந்த காலத்திலே இடம்பெற்ற பல்வேறு அனர்த்தங்களின் போது தென்னிந்திய திருச்சபை பல்வேறு வகைப்பட்ட மக்களுக்கு அபயம் அளித்துள்ளது. சமூகநல மேம்பாட்டுத் திட்டங்கள் மேலும் வளர்ச்சி காணுவதுடன், மறைபரப்புப் பணி மூலம் மக்களை நல் வழியில் வழிநடத்த வேண்டும் என்றார்.

இலங்கை வங்கி மாங்குளக்கிளை முகாமையாளர் திரு எஸ் இந்திரஜோதி உரையாற்றுகையில் ஜீவனோபாயத்திற்கு ஏற்ற வகையில் சபையின் செயற்பாடுகள் அமைய வேண்டும் இதற்கு சிறந்த உதாரணமாக தென் இந்திய திருச்சபை அமைந்துள்ளது என்றார். கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வு கழக நிர்வாக சபைத் தலைவர் திரு. எஸ். தனபாலசிங்கம் தமது உரையிலே இறைவன் பணி என்பது உள்ளத்திலே கள்ளம், கபடம் இல்லாத நிலையே ஆகும் இதனை அடிப்படையாகக் கொண்டு சபையின் செயற்பாடுகள் அமைவதுடன் இன்றைய சூழலுக்கு ஏற்ப நடைபோட வேண்டும் என்றார். பொதுக கூட்டத்தின் நிறைவிலே சமாதானபுரம் திருச்சபை ஊழியன் அருட்திரு ஜி டி மைனசீலன் அவர்களினால் நன்றியுரை கூறப்பட்டது.

மாலை 2-00 மணியளவில் கல்ல நிகழ்வுகள் ஆரம்பமானது. முறிகண்டி பெண்கள் இல்லத்தினால் கோலாட்டமும், ஆனைக்கும் அறுகம் புல்லில் அடி சறுக்கும் என்ற நாடகமும், சலோம்நகர் ஆண்கள் இல்ல மாணவர்களினால் வில்லுப்பாட்டும், அமெரிக்க மிஷனரி மாரின் வருகை என்ற நாடகமும், மாங்குளம் ஆண்கள் இல்ல மாணவர்களினால் மெய்யான கடவுள் என்ற நாடகமும், சமாதானபுரம் திருச்சபை ஒய்வுநாட்பாடசாலைப் பிள்ளைகளினால் ஓர் நடன நிகழ்வும் இடம்பெற்றது இந் நிகழ்ச்சிகள்யாவும் சபையோரின் பெரும் வரவேற்பைப் பெற்றுக்கொண்டது.

இவ்விழாவிலே கலந்து கொண்ட யாவருக்கும் காலை, மதிய உணவுடன், குளிர்பானமும் ஆதீனத்தினால் வழங்கப்பட்டது. இந் நிகழ்வுகள் யாவும் சிறப்பான முறையில் இடம்பெறுவதற்கு எமது திட்டப் பணிப்பாளர் திரு எஸ் இரத்தினவேல் அவர்கள அனைத்து வழிகளிலும் உதவினார்.

குறிப்பாக வன்னியில் பல இடம்பெயர்வுகளும், வாழ்வியல் சீர்குலைவுகளும், பல்வேறு அனர்த்தங்களின் மத்தியிலும் எம் மக்கள் வாழ்கின்ற சூழ்நிலையில் அநேகமக்களின் பிரசன்னத்துடன் அமைதியான முறையில் இவ் பொன்விழா நிகழ்வு இடம்பெற்றது எல்லாவற்றிற்கும் மேலாக இவ்விழா சிறப்பாக இடம்பெற கடவுள் துணை புரிந்தார். அவருக்கு நன்றி!

தொகுப்பு:
அன்பன் தயா

வன்னிச் செய்திகள்

வாலிபர் பாசறை வன்னிப்பிராந்தியம்

சென்ற செப்ரெம்பர் மாதம் 12ஆம் 13ஆம் 14ஆம் வெள்ளி, சனி, ஞாயிறு) திகதிகளில் ஜெயபுரம் திருச்சபையில் இவ் வாலிபர் பாசறை நடைபெற்றது ''பாடுகளின் மத்தியில் கிறிஸ்து'' என்பது மகுட வாக்கியமாகும். சுமார் 100 (நூறு) வாலிபர்கள் இதில் கலந்து கெரண்டனர். வேதப்படிப்பு, புதிர், போட்டி, பல விளையாட்டுக்கள் சிரமதான பணிகள் பல இனிய புதிய பாடல்கள் பயிற்றல் இப்பாசறையில் இடம்பெற்றது. இப்பாசறை தென் இந்திய திருச்சபையின் யாழ் ஆதீனத்தின் சமய கல்வி குழுவினால் நடைபெற்றது.

தகவல்: கு. இரத்தினவேல்
திட்டப்பணிப்பாளர் வன்னிப் பிராந்தியம்

வரவேற்பு

கல்மடுக்குளம் திருச்சபையின் ஊழியன் அருட்திரு வி. எல். பத்மதயாளன் உதவிக் குருவாக அபிஷேகம் பெற்றதையொட்டி அவருக்கு 06 - 07 - 97 மாலை 4-00 மணியளவில் திரு ஏ அருள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

அருள்திரு. ஐ. அருள்பாலன் அகாலமரணம்

கிளிநொச்சியிலுள்ள கோணாவில் தென்னிந்தியத் திருச்சபையின் போதகராகக் கடமையாற்றிய அருள்திரு இன்னாசி அருள்பாலன் அகாலமரணமானார். அன்னார் சத்தியாவின் அன்புக்கணவரும்; பேதுரு இன்னாசி, இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும்; கதிரவேலு அன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார். 'உதயதாரகை'யும் அன்னாரின் குடும்பத்தினருடன் தனது துயரங்களைப் பகிர்ந்து கொள்கிறது.

செய்திச் சரம்

டயானாவின் கதறல்

டயானாவின் வாயிலிருந்து புறப்பட்ட இறுதி வார்த்தைகள் ''தயவு செய்து இனியாவது என்னை விட்டு விடுங்கள்'' என்ற கதறலாகும். விபத்தால் குற்றுயிராகத் துடித்துக் கொண்டிருந்த டயானாவைச் சூழ நின்று பல வேறு கோணங்களில் படங்களைப் பிடித்துக் கொண்டிருந்தனராம் புகைப்படக்காரர்கள். உடனே டயானா ''தயவு செய்து இனியாவது என்னை விட்டு விடுங்கள்'' எனக் கெஞ்சலுடனான கதறலுடன் மயக்கமாகிப் போனார். பின்னர் தனது மயக்கத்திலிருந்து அவர் மீளவே இல்லை.

✲

மக்களின் கதறல்

டயானாவின் மரணத்தினால் கதறிக்கொண்டு நின்ற ஒரு அம்மையாரை பி. பி. ஸி. செய்தியாளர் பேட்டி கண்டபோது 'என் மகள் கார் விபத்தில் இறந்து விட்டாள். தவறு செய்யாதார் எவருமில்லை. சார்ள்ஸ் உட்பட சகலரும் தவறு இழைத்தவர்கள் தான். இவர்கள் அனைவரும் திருந்தி நடப்பதுதான் டயானாவுக்கு நாம் செய்யும் அஞ்சலி'' என்றார்.

ஜமார் அன்னை தெரேசா கருத்துத் தெரிவிக்கையில் 'பத்திரிகைகளால் மோசமாக நடத்தப்பட்ட இளம் பெண்ணை மக்கள் அனைவரும் நேசிக்கின்றனர். ஹாயிட்ஸ் நோயாளிகளை அவள் திறந்த மனதுடன் கட்டி அணைத்தாள். இதனால் தான் அவள் என் அருகே நெருங்கி வந்தாள். நான் விரைவில் இறந்தால் அந்த நல்லவளுடன் இணைந்து விடுவேன்'' என்றார்.

✲

அன்னையும் ஏழையும்

அண்மையில் காலஞ் சென்ற அன்னை தெரேசாவுக்கு ஒருமுறை ஒரு ஏழைக் குடியானவர் தனது ஒரு நாட் கூலியை ஒரு டப்பாவுக்குள் அடைத்துக் கொண்டு, காணிக்கை கொண்டு வந்தார். அதற்குள் இந்திய ரூபாய்களில் 2..75 இருந்தது. அன்னைக்கு என்ன செய்வதென்றே தெரியாத இக்கட்டு நிலை. இக் காணிக்கையை ஏற்றுக் கொண்டால் அவரது இன்றைய செலவுக்கு அவரிடம் பணம் இல்லை. ஏற்றுக் கொள்ளா விட்டால் அவரது ஏழை உள்ளம் முறிந்து போகும்.

உடனடியாக அந்தக் காணிக்கையைஏற்றுக்கொண்ட அன்னை, அருட்சகோதரி ஒருவரை அழைத்து ''இவர் தன்னிடம் இருந்த எல்லாவற்றையும் காணிக்கையாகக் கொண்டு வந்து விட்டார். இன்றைய இரவுக்கு இவரிடம் எதுவும் இல்லை. ஏதாவது கொடுத்து விடவும். இவர் தந்த காணிக்கை நான் பெற்ற நோபல் பரிசிலும் விடப் பெரிது'' என்றார்.

இன்னுமொரு முறை மேடையில் அன்னையின் கருச்சிதைவு எதிர்ப்புக் கொள்கைக்கு எதிராக ஒரு இளம் பெண் காது கொடுத்துக் கேட்க முடியாத வார்த்தைகளைக் கொண்டு உரையாற்றி இறுதார். அவர் ஒரு பத்திரிகையாளர். அன்னை எவ்வித கோபமுமின்றி அதைச் செவிமடுத்து விட்டுப் பின்னர் தனது உரையில் ''என் அன்புச் சகோதரியான இளம் பெண்ணே, உங்கள் அன்னை உங்களைக் கருவிலே நிதைத்திருந்தால், இந்த உரையை நீங்கள் எமக்கு வழங்கியிருக்க முடியுமா?'' என்று பணிவுடன் கூறினார். வாயடைத்துப் போனார் அந்த இளம் பத்திரிகையாளர்.

✲

திருமறை இல்லம் புனருத்தாரணம்

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெருவில் இயங்கிவந்த திருமறை இல்லம் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது. 1995 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற சூரியக்கதிர் நடவடிக்கையினால், இந்த இல்லம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

செல்ல ஞாயிற்றுக்கிழமை (31 - 08 - 97) திருமறை இல்லம் தமது பேராயரினால் மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 4 ஆம் குறுக்குத் தெருவிலுள்ள நமது குருமனையில் அமைந்திருந்த சிறுவர் இல்லமும் திருமறை இல்லத்திற்கு மாற்றப்பட்டது

✲

இறையியற் கல்லூரி புனருத்தாரணம்

சூரியக்கதிர் நடவடிக்கையைத் தொடர்ந்து வட்டுக்கோட்டையில் இயங்கி வந்த கிறிஸ்தவ இறையியற் கல்லூரி மறுபடியும் மருதனார் மடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

பேராயர் எஸ். ஜெபநேசன் நடாத்திய வழிபாட்டுடன் இந்த இறையியற் கல்லூரி கிரமமாகத் தன் செயற்பாடுகளை நடாத்தி வருகின்றது.

✲

யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா

யாழ் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா இம்மாதம் 6ஆம் திகதி சனிக்கிழமை கைலாசபதி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்தப் பட்டமளிப்பு விழாவில் உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி. சி.வி செல்லையா அவர்களுக்கு தமிழ்த்துறையிலும், வண. டி எஸ் தியாகராசா அவர்களுக்கு கிறிஸ்தவ நாகரீகத் துறையிலும் கலாநிதிப்பட்டங்கள் வழங்கப்பட உள்ளன.

✲

திட்டப்பணிப்பாளர் நோவல் சுரேஷ் நாடுதிரும்பினார்

நமது திருச்சபையின் திட்டப் பணிப்பாளர்களில் ஒருவரான திரு. நோவல் சுரேஷ் தம்பு அவர்கள் 23-8-97 சனிக்கிழமை தமது குடும்பத்துடன் நாடு திரும்பினார். இவர் தற்போது கொழும்பிலுள்ள நமது திருச்சபை இல்தைதில் கடமை புரிந்து வருகின்றார். இவரையும் இவரது மனைவி பத்மினி அவர்களையும், பிள்ளைகளையும் வருக வருகவென வரவேற்கின்றோம்.

✲

திரு W. T. தங்கராசா அவுஸ்திரேலியா சென்றார்

கொழும்பிலுள்ள நமது திருச்சபை இல்லத்தில் இருந்து நமது ஆதினத்தின் காரியஸ்தர்களில் ஒருவராகப் பணியாற்றி வந்த திரு. W. T. தங்கராசா சென்ற வெள்ளிக்கிழமை (29 - 08 - 97) தமது துணைவியாருடன் அவுஸ்திரேலியா பயணமானார். இவருடைய பிள்ளைகள் ஏற்கனவே அவுஸ்திரேலியாவிலும், கனடாவிலும் குடியேறியிருப்பது தெரிந்ததே.

✲

இந்திய பல்கலைக்கழகங்களில் நமது மாணவிகள்

ஆகஸ்டு மாதம் ஆரம்பமாகும் புதிய கல்வி ஆண்டில் பின்வருவோர் மாணவிகளாக சேர்ந்துள்ளனர். செல்வி. தேவகி ஜயம்பிள்ளை — சென்னை பெண்கள் கல்லூரி (W C C), செல்வி எஸ்தர் பவசிங், செல்வி கிறிஸ்டினா போல் — சென்னை YMCA கல்லூரி

✲

திடப்படுத்தல் ஆராதனைகள்

24-08-97 ஞாயிற்றுக்கிழமை வவுனியா C. S. I ஆலயத்தில் ஒரு திடப்படுத்தல் ஆராதனை நடாத்தப்பட்டது. அதில் 18பேர் திடப்படுத்தல் பெற்றனர். அதே தினம் செட்டிகுளத்தில் நடைபெற்ற திடப்படுத்தல் ஆராதனையில் பிள்ளைகள் திடப்படுத்தல் பெற்றனர்.

✲

செட்டிகுளம் தேவாலயம் புனரமைப்புப் பிரதிஷ்டையும்

செட்டிகுளத்திலுள்ள நமது ஆலயம் அருட்திரு. சி. ரி. றொபேர்ட்ஸ் அவர்களின் அரும்முயற்சியினால், விரிவாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டது. புனரமைக்கப்பட்ட ஆலயத்தை 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பேராயர் பிரதிஷ்டை செய்துவைத்தார்.

✲

நாடு திரும்பினார்

ஹங்கேரியில் இம்மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை ஹங்கேரி புடபெஸ்ற் இல் நடைபெற்ற உலக சீர்திருத்திய சபைகளின் கவுன்சிலின் கலந்து விட்டு வண. எஸ். ஜெயநேசன் 23 ஆம் திகதி சனிக்கிழமை நாடு திரும்பினார்.

✲

வண. டீ. தேவநேசன்

நமது இறையியல் கல்லூரியின் விரிவுரையாளர்களில் ஒருவரான வண. டீ. தேவநேசன் தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் தமது Mth படிப்பை முடித்துக்கொண்டு நாடு திரும்பினார். இவர் திறிஸ்தவ இறையியல் கல்லூரியில் விரிவுரையாளராக இணைந்துள்ளார்.

✲

தமிழ்நாடு இறையியற் கல்லூரிக்கு புதிய அதிபர்

தமிழ்நாடு இறையியற் கல்லூரியின் புதிய அதிபரைத் தெரிவு செய்வதற்காக 3பேரைக்கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டது.

திருச்சிப் பேராயர் அதி வண. டி. போல்ராஜ் இதன் தலைவராகப் பணியாற்றுவார். இவருடன் மதுரைப் பேராயர் அதி வண. தவராஜ் டேவிட் அவர்கள், ஆற்காடு லூதரன் திருச்சபைப் பேராயர் அதி வண. டி லரான்க்வி அவர்களும் பணியாற்றுவார்கள்.

✲

உடனே வேண்டாம் 1/3

இந்தியாவில் பாராளுமன்றத்தில் 1/3 பகுதியை பெண்களுக்கு ஒதுக்குவது உடனடியாக நடைமுறைப்படுத்தப்படாது என்றும், கிறிது சிறிதாகவே இது மேற்கொள்ளப்படும் எனறும் இந்தியப் பிரதமர் குஜ்ரால் கூறியதாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று கூறியது. 'உதயதாரகை' இதழ் தனது கேள்வி - பதில் பகுதியில் இக்கருத்தினைப் பிரஸ்தாபித்திருந்தது தெரிந்ததே.

✲

நான்கு காலில் குழந்தை

தினகரன் 10- 8- 97 இன் இதழ் ஒரு விசித்திரத் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து திலையடி குடியேற்றத்தில் வசிக்கும் பி. ரமீஸ் (23 வயது) என்பவரின் மனைவி ரஜீனா (23 வயது) புத்தளம் வைத்தியசாலையில் 9- 8- 97 இல் நான்கு கால்களுடன் ஆண்குழந்தை ஒன்றைப் பிரசவித்துள்ளார், குழந்தை ஆரோக்கியமாக உள்ளது. ரமீஸ் தம்பதிகளின் நான்காவது குழந்தையான் இதன் மேலதிகமான இரு கால்களையும் சத்திர சிகிச்சை மூலம் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

✲

எயிட்ஸுக்கு மருந்து மற்றவரின் உறுப்பு

உலகின் பெரும் பீதியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் எயிட்ஸ் நோயாளருக்கு சான் பிரான்கிஸ்கோ நகரின் கலிபோனியா பல்கலைக்கழகம் மாற்று உடலுறுப்புக்களை வழங்குகிறது. ஆனால் நோய்க் கிருமிகள் கட்டுப்பாட்டில் உள்ளவர்களுக்கும் மற்ற வியாதிகளால் உயிரிழக்கும் அபாயம் இல்லாதவர்களுக்கும் மட்டுமே மாற்று உடலுறுப்புக்கள் வழங்கப்படுகின்றன வேறு வழியேயில்லை என்ற நோயாளிகள் மட்டுமே இந்த சலுகைகளைப் பெறமுடியும் என்று பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவிக்கின்றது.

✲

16 ஆண்டு நிறைவில்....

ஹரிபட் வின்சலோ இல்லம் தங்களுடைய 16 ஆண்டு நிறைவை

(6ம் பக்கம் பார்க்க)

கவிச் சென்னீடு

தித்தோம்

நடக்கிறதே கொடிய யுத்தம்
வடிவதெல்லாம் இங்கு ரத்தம்
சிதைகிறதே மண்ணில் புத்தம்
வருவதெல்லாம் எமக்குப்
பித்தம்
அழுகுரலே இங்கு நித்தம்
அழிகிறதே இறை சித்தம்
வருவதெப்போ அமைதி
முத்தம்
சேர்வதெப்போ எம்முள்
சுத்தம்
அகல்வதெப்போ அவலச்
சத்தம்
மறைவதெப்போ அவலத்
தித்தோம்–சகலரின்
உள்ளத்தில் வந்து விடின்
உத்தமம்
சமாதான ஒலி அங்கு நித்தமும்.

—சமாதானன

தேவாலய நினைவுகளில். . .

வெண்புறாவை
எதிர்பார்த்திருக்க
வந்துபோனது அலுமினியக்
கழுகு

கூவி வந்த குஞ்சுகள்
கோவிற் கூரையில் ஒப்பாரி
பாடின

சிலுவை நாதரின் முன்னால்
அரங்கேறியது பெரும்
'பலிப்பூசை'

இறைவா !
கோதுமை மணிகளை
விதைத்துள்ளோம்
அவை மடிந்து போயுள்ளன. . .
வாழ்வு தர சிலுவை

சுமந்தவனின்
பாடலை
வானம்பாடி பாடிச் செல்கிறது
சிதிலமடைந்த சுவரினூடும்
நாளை
சூரியன் தெரியும்

—கிபயாசன்

கடவுளிடம் கேட்பது

மழலை மனமுள்ள
உலகொன்று வேண்டும்
மனதார மன்னிக்கும்
மனிதரும் வேண்டும்
மனிதத்தை மதிக்கின்ற
நேயமும் வேண்டும்
புனிதத்தை புதுப்பிக்கும்
பூக்களும் வேண்டும்
தனக்கென வாழ்கின்ற
வாழ்வகல வேண்டும்
தனிமையின் கொடுமைகள்
அகன்றிட வேண்டும்
மண்ணுலகின் கண்ணீரும்
மறைந்திட வேண்டும்
விண்ணுலகில் வசிக்கின்ற
பாக்கியம் வேண்டும்
சச்சரவு இல்லாத
அகிலம் வேண்டும்
சமரசம் வந்துலவும்
ராஜ்ஜியம் வேண்டும்
போர்க்கலங்கள் ஏர்கலங்கள்
ஆகிட வேண்டும்
கார்முகில்கள் பார்பசியை
ஆற்றிட வேண்டும்
ஓடுகின்ற அருவியாக
அன்புபாய வேண்டும்
பாடுகின்ற குருவியாக
நாமும் மாற வேண்டும்
இயற்கையில் உன்னைக்
கண்டிட வேண்டும்
அனுதினம் உனைசுமக்கும்
இதயமும் வேண்டும்

J. M. T. றொட்றிக்கோ
(நம்பிக்கை இல்லம்)

நம்பிக்கையிற் களிகூருங்கள்!

பிள்ளைகள் விழா கட்டுரைப் போட்டியில் 13வயதுப் பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

''இயேசு கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்'' (கொலோ 27 : 1)

இன்று மனிதரிடத்தில் நம்பிக்கையில்லை. நம்பிக்கையில்லாமல் உலகம் தள்ளாடுகிறது. உலக மக்கள் புழுக்களைப்போல் இருளில் நெளிந்து துடியாய்த்துடிக்கிறார்கள்.

பசியால், பஞ்சத்தால், வறுமையால், பற்றாக்குறையால், மன வேதனைகளால், தீராத நோய்களால் மனிதர்கள் துன்பப்பட்டுத் துடிக்கிறார்கள். எதிர்கால நம்பிக்கையை இழந்து கண்ணீர் விட்டுக் கதறியழுகிறார்கள்.

கிறிஸ்துவே எமது நம்பிக்கை நாயகன். இயேசுகிறிஸ்து — அவரால் செய்யக்கூடாத காரியம் ஒன்றுண்டோ? அவர் செய்த அதிசயங்களையும், செய்ய முடியாத காரியங்களையும் எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் பயப்படக் கூடாது ''நீ பயப்படாதே. உனக்குக் கேடகமும், மகாபெலனுமாயிருக்கிறேன்'' (ஆதி 15 : 1) கர்த்தர் ஜீவனிலும் பெலனானவர்.

கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுடன் வாழ்பவர்கள் கழுகுகளைப் போல் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் நடந்தாலும் சோர்வடையார்கள். ஓடினாலும் இளைப்படையார்கள்.

நம்பிக்கையைக் கெடுப்பது சந்தேகம். சந்தேகங்கள் எங்களைக் கெடுக்கும். அன்பை, ஒற்றுமையைக் குலைத்து, குடும்பங்களைக் குட்டிச் சுவராக்கும். இயேசு கிறிஸ்து நம்மோடு எப்பொழுதும் கூட இருப்பார். அவரை நாங்கள் நம்பிக்கையுடன் விசுவாசிக்க வேண்டும்.

அகதிகளாகவும், அனாதைகளாகவும் அலைந்தாலும் நம்பிக்கையுடன் நடக்க வேண்டும். பெரு மழை பெய்து, புயற்காற்றடித்து, கடலலையடித்தாலும் நாங்கள் நம்பிக்கையுடன் கடவுளைத் தியானிக்க வேண்டும். ''தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும், ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர்''

(சங்கீ 46 : 1)

தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியைக் கொடுக்கிறார்

செல்வி
என். சுபாஷினி
பண்டத்தரிப்பு திருச்சபை

நாம் நம்பிக்கையுடன் வாழ வேண்டும் என்று எங்களுக்கு வேதம் புத்தி சொல்கிறது.

இயேசு எங்களைக் காக்க வல்லவராயிருக்கிறார். நாம் கடவுளுடைய சித்தப்படி எதைக்கேட்டாலும் அவர் எமக்குச் செவி கொடுப்பார் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இதன் நிமித்தம் எத்துன்பம் வந்தாலும் நாம் மகிழ்ச்சியாய் இருப்போம். கர்த்தர் எங்களைக் காக்க வல்லவராயிருக்கிறார். கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோசமாய் இருக்க வைப்பது அவர்மேல் வைக்கும் நம்பிக்கையேயாகும். நமது வருங்கால நம்பிக்கை இயேசுகிறிஸ்து.

அவரே நம்மோடு எப்பொழுதும் கூட இருப்பவர் நாங்கள் கலங்கித் திகைக்க வேண்டியதில்லை. கிறிஸ்துவானவர் மகிமையின்

(5ம் பக்கம் பார்க்க)

ஆதியாகமம் பேசுகிறது

பாகம் ஐந்து

ஆகவே ஓய்வுநாள் ஆசரிப்பு மனித சட்டமானால் மனுக்குலத்திற்கு அஃது பாரமாகவே இருக்கும். அது இறை சட்டமானால் மனிதனுக்கு அஃது பரிசுத்தமாக இருக்கும். என்பதே உண்மை. ''6 நாட்களில் வேலை; 7ஆம் நாளில் ஓய்வு'' என்பது யூத இலக்கிய சம்பிரதாயமானால் அது மனிதனுக்கு சடங்காகும். மாறாக, அதனை வேதாகம ஒழுக்கமாக கைக்கொண்டால், நிச்சயம் அது மனிதனுக்கு பரிசுத்த ஒழுங்கு முறையாகும்.

ஓய்வுநாள் ஆசரிப்பு இறைசட்டமாக மனிதனுக்கு கொடுக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் வேதாகமத்தில் உள்ளன.

1) தேவனுடைய 4ஆம் கற்பனை இவ்வுண்மையை வலியுறுத்துகிறது (யாத 20 : 11).

2) உபாகம சட்டமும் இவ்வாறே வலியுறுத்துகிறது

(உபா 5:15)

3) தீர்க்கதரிசிகள் ஓய்வுநாள் ஆசரிப்பைக் குறித்து வலியுறுத்துகின்றனர்.

a) ஏசாயா தீர்க்கதரிசி ஓய்வுநாளை உங்கள் விருப்பப்படி ஆசரியாமல், கர்த்தருக்கேற்ற மனமகிழ்ச்சியும், பரிசுத்தமுமான நாளாக ஆசரிக்க வேண்டும் என்கிறார் (ஏசா 58 : 13 - 14).

b) எரேமியா தீர்க்கதரிசி அந்நாளில் உங்கள் ஆத்துமாக்களுக்காக எச்சரிக்கையாயிருந்து பரிசுத்தமடையுங்கள் என்று கண்டிப்பாக கூறுகிறார் (எரே 17:22).

c) எசேக்கியேல் தீர்க்கதரிசி அந்த நாளை கர்த்தருக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் பரிசுத்த அடையாளம் (எரே 20:20) என்கிறார்.

இவ்வண்ணமே நியாயப்பிரமாணங்களையும், தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்ற வந்த (மத் 5 : 17) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஓய்வுநாளுக்காக மனிதன் படைக்கப்படாமல், மனிதனுக்காகவே இந்நாள் படைக்கப்பட்டதாக கூறுகின்றார். ஆகவே ஓய்வுநாள் என்பது பரிசுத்தமாக ஆசரிக்கப்பட வேண்டியதும், தேவையானால் நன்மை செய்வதும் தேவனுக்குப் பிரியமானதாகும். 6 நாட்களும் உலக சேவைக்கு தன்னை அர்ப்பணிக்கும் மனிதன் ஓய்வுநாளிலாவது இறை சேவைக்கு தன்னை அர்ப்பணித்து சர்த்தரை மகிமைப்படுத்தக் கூடாதா? இதுவே வரப்போகும் நியாயத்தீர்ப்பு காலத்திற்கு மிக அவசியமாகும்.

(தொடரும்)

வண. J. T.

விண்ணகத் தந்தையிடம் மன்றாடுக

ஆண்டவர் விரைவில் வருவார். எதைப்பற்றியும் நீங்கள் கவலைப்பட வேண்டாம். ஆனால் எல்லாச் சூழ்நிலையிலும் உங்கள் விண்ணப்பங்களை நன்றியோடு கூடிய ஜெபத்தினாலும் மன்றாட்டினாலும் கடவுளிடம் எடுத்துச் சொல்லுங்கள். அப்பொழுது எல்லா அறிவாற்றலுக்கும் அப்பால் உள்ள தெய்வ சமாதானம் உங்கள் உள்ளத்தையும் உங்கள் மனத்தையும் கிறிஸ்துயேசுவோடு இணைத்தவாறே இருக்கும்படி காத்துக் கொள்ளும்.

(பிலிப்பியர் 4 - 5 - 7)

நான் வற்புறுத்திக் கூறுவது இதுவே எல்லா மனிதருக்காகவும் நீங்கள் கடவுளிடம் வேண்டுதல் செய்யவும், ஜெபம் செய்யவும் மன்றாடவும், நன்றி செலுத்தவும் வேண்டும். நாம் இறைபற்றும்கண்ணியமும் நிறைந்தவர்களாய் தொல்லை இன்றி, அமைதியாக வாழ்க்கை நடத்தும் நிலை ஏற்படுவதற்காக அரசர்களுக்காகவும் எல்லா அதிகாரிகளுக்காகவும் அப்படிச் செய்ய வேண்டும். இப்படிச் செய்வது நல்லது. நம் மீட்பராகிய கடவுளின் பார்வையில் உகந்தது. ஏனெனில் எல்லா மனிதரும் மீட்பைப் பெறவும் சத்தியத்தை அறிந்து கொள்ளவும் வேண்டும் என்பதே அவரது திருவுளம். கடவுள் ஒருவரே, கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே இணைப்பாளரும் ஒருவரே. அவர் மனிதனாகிய இயேசுகிறிஸ்துவே. அவர் எல்லாரையும் மீட்டுக்கொள்ளும் பொருட்டு தம்மையே மீட்புப் பொருளாக ஒப்புக் கொடுத்தார்.

(1ம தீமோத்தேயு 2 : 1 - 6)

கடவுளையும் நம்முடைய ஆண்டவராகிய யேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்கு அருளும் நலமும் பெருகுக. நம்முடைய ஆண்டவரும் மீட்பருமாகிய யேசு கிறிஸ்துவின் அருளைச் சார்ந்து வாழ்வதிலும், அவரை அறிவதிலும், வளர்ச்சி அடையுங்கள். அவருக்கு இப்போதும் எப்போதும் மாட்சிமை.

(2ம் பேதுரு 1:2-3:18)

ச. ச. சற்குணசிங்கம்
செயலாளர் தெ. இ திருச்சபை,
சாவகச்சேரி.

வாலிபர் சோலை

சிந்தனைக்கு

"நிறைவுள்ள காலத்தில் உன் மனம் சோர்
வடையுமானால்
குறைவுள்ள காலத்தில் உன் ஆற்றல்
இன்னும் குன்றிவிடுமே?"
(நீதி 24 : 10)

என் இனிய இளைய நெஞ்சங்களே! இவ்விதழில் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

சென்ற இதழில் இருக்கின்ற ஆற்றலுடன் செயற்படும் படி இறைவன் கிதியோன் என்ற வாலிபனைப் பார்த்துக் கூறியதைப்பார்த்தோம். நமது ஆற்றல்கள் என்ன? யாக்கோபின் மகனான யோசேப்பு வாலிபனாய் இருந்தபோது அவனது அழகையும், இறைபக்தியையும், அவன் மீது அவனது தந்தை வைத்திருந்த சிறப்பான பற்றினையும், பார்த்த சகோதரர்கள் அவன் மீது பொறாமைப்பட்டு அவனைப் பிடித்து அந்நிய நாட்டுக்கு விற்றுப்போட்டார்கள்.

ஆனால் யோசேப்பு இறைவனில் வைத்திருந்த உறுதியான நம்பிக்கையும், பயபக்தியும், அவரை ஒழுக்கமுள்ள வாலிபனாக இருக்கும் படி செய்தது. அவரைத்தீமைகள் தொடர்ந்த போதும், அவை எல்லாவற்றையும் இறைவன் நன்மையாக முடியப் பண்ணினார்

யோசேப்பு சென்ற இடமெல்லாம் நன்மைகள் உண்டானது அவரிடம் இருந்த இறைபக்தியும் இறைநம்பிக்கையும், ஒழுக்கமும், உண்மைத் தன்மையும் பார்வோனுக்கு யோசேப்பை ஒரு ஆற்றலுள்ள மனிதனாகக் காட்டியது. எனவேதான் பார்வோன் அவரை எகிப்தின் அதிபதியாக்கினான்

நமக்கு இறைவனால் கொடுக்கப்படும் தாலந்துகள்; நாம் இறைவனில் வைக்கின்ற நம்பிக்கையும் இறைபக்தியினாலும் ஒழுக்கமுள்ள வாழ்வினாலும் நம்மை சிறந்த ஆற்றல் உள்ள வாலிபனாக மாற்றுகின்றது. சிந்திப்போம்! செயற்படுவோம்!!

★ சென்ற இதழின் கேள்வியின் விடை
— கிதியோன்

★ உங்களுக்குத் தெரியுமா?

தென் இந்திய ஐக்கிய திருச்சபையின் மகுட வசனம்.
"அவர்கள் எல்லாம் ஒன்றாய் இருப்பார்களாக"

★ இவ் இதழின் கேள்வி

□ இப்பகுதியில் வரும் யோசேப்பின் எகிப்திய பெயர் என்ன?
திருமறையைப் புரட்டுங்கள், பதிலை அனுப்புங்கள்.

முகவரி:- வாலிபர் சோலை, உதயதாரகை,
ஆதீனகாரியாலயம், வட்டுக்கோட்டை.

மீண்டும் அடுத்த இதழில் உங்களைச் சந்திக்கும்வரை விடை பெறும்.

நண்பன்
யோசுவா

கேள்வி பதில்

எஸ். ஆர்- மேஸ்
நவாலி வடக்கு

கே:- "இந்த யுத்தம்" முடிவிற்குக் கொண்டுவரப்பட்டு — இரு இனமக்களும் சமாதானமாகவும் சபீட்சமாகவும் வாழ்வதற்கேற்ற வழி இந்த 20ஆம் நூற்றாண்டில் கிட்டுமா?

ப:- இறைவனால் படைக்கப்பட்ட உலகில் அடுத்து நிகழவிருப்பது என்னவென்பதை இறைவன் மட்டுமே அறிவார்.

ஆர். ஜெயராஜ்
வட்டுக்கோட்டை

கே:- அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் தமிழ் மக்களுக்கு நன்மை அளிக்குமா?

ப:- பஞ்சபாண்டவர் கட்டிலிற் கால் போல மூன்று பேர் என்று சொல்லி, இரண்டு விரலைக் காட்டி, பின் ஒன்றை எழுதி அதையும் அழித்ததாக ஒரு கதை உண்டு.

என். பாமினி
மட்டுவில்.

கே:- இங்கிலாந்தின் முடியாட்சியின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

ப:- தற்போதுள்ள இராஜகுமாரர்களும், இராஜகுமாரத்திகளும் செய்கின்ற வேலைகளைப் பார்த்தால், முடியாட்சியின் அஸ்தமனம் தொடங்கிவிட்டதென்றே தோன்றுகின்றது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

'உங்களவன்' எழுதும்

தொடர் கதை

நிம்மதி எங்கே?

அப்போது — ஒருகரம் ஒன்று வந்து, அவனின் கையிலிருந்த துப்பாக்கியைத் தட்டி விடுகிறது. முதலாளியார் உட்பட அனைவரும் திரும்பிப் பார்க்க, அங்கே ராஜா கெம்பீரமாக நின்று கொண்டிருந்தான். ஒரு நொடிப் பொழுதில் தலைவனைத் தவிர மற்ற இரு கொள்ளை நபர்களும் தூள் தூளாக்கப்படுகிறார்கள். தூள் தூளாக்கப்பட்ட அவர்கள் நிலைகுலைந்து மயங்கி விழுந்தார்கள்

இனியும் பொறுத்திருந்தால் தானும் அந்நிலைக்குத்தான் தள்ளப்படுவோம் என நன்றாக உணர்ந்து கொண்ட கொள்ளையன் தலைவ நசீர் ராஜாவோடு மோத ஆரம்பித்தான். இருவரும் இடைவெளி இல்லாது தொடர்ந்து மோதிக் கொள்கின்றனர். உடனே அவனின் முகத்திரை கிழிக்கப்படுகிறது. தொடர்ந்து அவனின் முகத்தில் ஓங்கிக்குத்துகிறான் ராஜா நசீர் சுருண்டு விழுகிறான்

தனது பணப்பையிலிருந்து நன்றியுடன் பத்தாயிரம் ரூபாவை எடுத்த முதலாளியார் அவனிடம் அதை நீட்டி "தம்பி உன் உதவிக்கு என் மனப் பூர்வமான நன்றி—எப்போதும் உண்டு" என்கிறார். "மொதலாளி ... ...உங்க பணத்துக்காக நான் இதைச் செய்யல. உங்க உசிர் பிரிந்தா உங்கட தாயில்லாத பிள்ளைகள் எப்பிடிக் கஷ்டப்படுவாங்கள் எண்டு எனக்குத் தெரியும் நானதை அனுபவிச்சுக்கிட்டிருக்கேன் அதாலைதான் ... ... எண்டாலும் உங்கட கடையிலை எனகொரு வேலை " "தாரமாயுண்டு "

அடித்து நொறுக்கப்பட்ட மூவரும் தரையிலே "கொற கொற வெ..." இழுக்கப்படுகிறார்கள். வெளி வீதியில் வந்தவுடன் அவர்களைக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகிறான்.

சிறிது நேரத்தினால் போலீஸ் ஸ்டேஷனை அடைந்த ராஜா அம்மூவரையும் ஸ்டேஷனில் ஒப்படைக்கிறான். "சார் இவங்க முதலாளியின்ரை கடைக்குள் புகுந்து அவரின் பெறுமதி மிக்க சொத்துக்களைகொண்டுபாய்ப் பார்த்தாங்க..... தகுந்த நேரத்திலை நான் மட்டும் போகலைன்னா முதலாளியின்ரை உயிர் காற்றெனப் பறந்து போயிருக்கும்" எனறு ஆங்கு நின்ற காவலதிகாரியிடம் சூளுரைக்கின்றான்

"கமோன் மிஸ்டர் ராஜா. நாங்க ஒரு வரைலை தேடிக் கொண்டிருந்த மூணு குற்றவாளிங்களையெல்லாம நீங்க பிடிச்சுத் தந்திருக்கீங்க உங்களாலை எங்க டிபார்ட்மெண்டுக்கே பெருமை கிடைச்சிருக்கு..."

அவர்களது பாராட்டுக்களோடு போலீஸ்டேஷனை விட்டு வெளியேறுகிறான் ராஜா.

தொடர்ந்து தனது ரத்தத்தை வியர்வையாக்கி தனது தங்கைக்காக உழைத்து வருகூறான் ராஜா.

நாள் வாரமாகி; வாரம் மாதமாகி; மாதம் வருடமாகி ஒரு வருடம் கழிந்து விடுகிறது. இன்னொருநாள் வைகறைப் பொழுதினில் கடைவேலை பார்ப்பதற்கென காலால் நடைபயில்கிறான் ராஜா. வீதியால் அவன் நடந்து கொண்டு போகும்போது ... ஒரு ஜமீன்தாரின் பிற்பக்கெட்டிலிருந்த மணிப்பர்ஸை நைஸாக உருவுகிற ஒருவனைக் கண்டு விட்டான். உடனே அவனைக் கையும் மெய்யுமாகப் பிடிக்கப் போகையிலே மணிப்பர்ஸை கீழே போட்டு விட்டு அவன் எடுத்தான் ஓட்டம். மணிப்பர்சை எடுத்த ராஜா அஞ்ஜமீந்தாரிடம் விஷயத்தைக் கூறி அந்த மணிபர்ஸை கொடுத்து விட்டு ஓடினவனைக் கண்ணோக்கினான். அவன் யாருமில்லை முதலாளியாரின் கடையுள் புகுந்து அவரின் உயிருக்கே உலைவைக்கத் துணிந்த கொள்ளையர் தலைவன் நசீர் தான்.

ஜமீன்தாரின் பாராட்டைப் பெற்ற ராஜா தன் ரத்தத்தை வியர்வையாக்கித் தனது தங்கைக்காக உழைத்து வருகிறான்.

ஒரு நாள் மாலைநேரம் அந்தி மயங்கும் வேளை. சூரியன் தனது பணியை முடித்துக் கொண்ட திருப்தியில் சந்திரனை அழைக்கிறான். சந்திரனும் சூரியனது அழைப்பை ஏற்றுக் கொண்டு வானில் தாண்டவம் வர, வேலையாட்கள் அனைவரும் தத்தம் வீடுகளுக்கு திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். அதில் ராஜாவும் அடங்கினான். தனது பாசத்தங்கையைக் கண்குளிரப் பார்ப்பதற்கு ஆவலுடன் அப்போது வீட்டிற்கு விரைந்து கொண்டிருந்தான்.

ஆனால் அவன் தனது தங்கையை வழியில் சந்திப்பான் என நினைக்கவில்லை. ஆமாம் அங்கே கடற்கரைப் பகுதியிலே தனது தங்கை கொள்ளையர் தலைவன் நசீரிடம் காதல் வார்த்தைகளைப் பகர்ந்து கொண்டிருப்படைக் கண்டான். (தொடரும்)

நம்பிக்கையிற்...

நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கிறார்.

கடவுளிடம் இன்னும் இன்னும் கிட்டிச் சேருவோம். அவர் பாவத்திலிருந்து நம்மை மீட்பார் என்ற நம்பிக்கையில் மகிழ்வு பெறுவோம். சர்த்தர் நம்மில் பெலனும், மகாபெரிய பாக்கியமுமாய் இருக்கிறார். இது எவ்வளவு பெரிய பாக்கியம். அவர் கடைசிநாளிலே பூமியின் மேல் நிற்பவர் அவர்மேல் வைக்கும் நம்பிக்கையே நலம் அழிவை நோக்கி நாம் ஓடாமல், மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபம் ஆகுவோம்.

உன்னதருடன் சஞ்சரித்தால், கிறிஸ்து நாதர் பாவத்திலிருந்து எம்மை மீட்டு எடுக்கிறார். அவர் எமது வழிகாட்டும் நம்பிக்கையின் நட்சத்திரமாகும்.

எங்கள் மீட்பர் உயிரோடிருக்கிறார். கடவுளுடைய சமூகம் எங்கள் அனைவரோடும் கூட இருக்கும் என்ற நம்பிக்கையை நாம் அடைவோமாக.

நம்பிக்கையின் ஒளி இயேசு நம்பிக்கையின் சந்தோசமும் இயேசு. நம் முழு நம்பிக்கையும் அவரே.

சாது சுந்தர்சிங் நினைவு

செப்டெம்பர் மாதம் 3ம் திகதி கிறிஸ்தவ துறவியான சாது சுந்தர்சிங் அவர்களது நினைவு தினமாகும்.

இந்தியாவின் பிரபல பத்திரிகையாளரான ''குஷ்வாந்த்சிங் என்பவர்'' இந்தியக் கிறிஸ்தவர்கள் என்ற கட்டுரையிலே இந்தியக் கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒரு மகாத்மாவும் தோன்றவில்லை. சாது சுந்தர்சிங் இந்த நிலையை அண்மித்ததாகக் குறிப்பிடலாம்'' என்று எழுதியுள்ளார்.

சாது அவர்கள் மிகுந்த பக்தி வைராக்கியமுள்ள ஒரு சீக்கியக் குடும்பத்திலே பிறந்தவர். தமது இளமைக் காலத்தில் கிறிஸ்தவத்தை நஞ்சென வெறுத்தவர்.

1904 ஆம் ஆண்டு அதாவது தமது 15 ஆவது வயதில் அவர் உள்ளத்தில் ஒரு மனப் போராட்டம் உண்டாகியது. இன்றிரவு எனக்கு மனச்சாந்தி கிட்டா விட்டால் ரயில் தண்டவாளத்தில் தலையை வைத்துத் தற்கொலை செய்து கொள்ளுவேனென முடிவு செய்தார். அன்றிரவு அவருக்கு இயேசுவின் தரிசனம் கிடைத்தது.

'நீ என்னை ஏன் எதிர்க்கின்றாய்? நான் உன்னை மீட்க வந்தவன். உனக்காகச் சிலுவையில் மரித்தேன்' என்று அவர் கூறியதாகத் தென்பட்டது அதன் பின்னர் சாது தனது குலப்பெருமைகளையெல்லாம் உதறித்தள்ளி விட்டு கிறிஸ்தவத் துறவியானார். உலகெங்கணும் சென்று கிறிஸ்துவின் அன்பைப் போதித்தார். 1919ம் ஆண்டு வட்டுகோட்டைக்கும் வந்து பிரசங்கம் செய்தார்.

திபேத்து எனும் மலை நாடு இவர் மனதைப் பெரிதுங் கவர்ந்தது. திபேத்து நாட்டு மக்களை இயேசுவின் அன்பர்களாக்க வேண்டும் என்பது இவருடைய வாஞ்சை. இந்த நாட்டுக்கு அடிக்கடி சென்று பிரசங்கஞ் செய்து வந்தார்.

1929ம் ஆண்டு சில திபேத்திய அடியார்களுடன் அந்த நாட்டுக்குச் சென்றார். அந்த பயணத்தின் பின்னர் அவர் திரும்பவேயில்லை அவர் காணாமற் போன போது அவருடைய வயது 40 ஆகும்.

இந்த மகான் ''இந்தியாவில் கிறிஸ்தவம் வேரூன்ற வேண்டுமானால், கிறிஸ்தவம் இந்திர மயமாக்கப்பட வேண்டும். ஆலயங்கள், குருமார், உடைகள், வழிபாட்டு முறைமைகள், இசை, இறையியல் என்பனவெல்லாம் இந்திய மயமாக வேண்டும் என்று கூறி வந்தார். அவருடைய சிந்தனைகள் இன்று பெரிதும்போற்றப் படுகின்றன பல வாலிபர்கள் அவரைப்போல 'சாது'வாக வர வேண்டும் என்று ஆசைபட்டார்கள்.

இந்தப் புனிதரின் நன்நாளில் அவருடைய வாழ்க்கைக்காக இறைவனைப் போற்றுவோமாக!

16 ஆண்டு..

12-8-97 அன்று செவ்வாய் கிழமை மாலை 4,00 மணிக்கு நினைவு கூர்ந்து ஓர் செபக் கூட்டத்தை நடாத்தினார்கள், இவ் வைபவத்துக்கு முன்னாள் பேராயர் பேரருள் கலாநிதி D. J. அம்பலவாணர் அவர்களும் திட்டமிடல் பணிப்பாளர் திரு. V. மித்திரரஞ்சனும் கலந்து கொண்டார்கள். சபைப போதகர் வண T. அசோக்குமார் இவ் ஆராதனையை நடாத்தி அருளுரையாற்றினார். இல்லப் பிள்ளைகள் விசேட பாடல்களைப் பாடினார்கள். இறுதியாக பேராயர் D.J. அம்பலவாணர் அவர்களின் ஜெபம் ஆசீர்வாதத்தோடு இக் கூட்டம் நிறைவு அடைந்தது

உசன் ப. ப. நிலைய விளையாட்டுப் போட்டி

மேற்படி விளையாட்டுப் போட்டி கடந்த ஆகஸ்ட் 2ம் திகதி நடந்தேறியது. இதில் பிரதம விருந்தினராக மிருசுவில் ரோ. க. ப. சாலை முதல்வர் திரு. F. X. அன்ரன் தம்பதியரும் சிறப்பு விருந்தினராக வண எஸ். ஐ. ஆனந்தராஜனும் பங்கேற்றனர். கொடியேற்றலும், மங்கள விளக்கேற்றலும் நிகழ்ந்த பின் வண- எஸ். ஐ. ஆனந்தராஜன் இறைவேண்டல் செய்தார். ப. பு. நி. மாணவி எஸ். சிவானியின் வரவேற்புரை யாவரையும் வியப்பிலாழ்த்தியது. தொடர்ந்து உரையாற்றிய சபை ஊழியன் வண. பென்ஜமின் ஜெயராஜா ''சிறார்களின் குறைகளைப் பொருட்படுத்தாமல் சிறப்பான வற்றைப் பாராட்டுங்கள் நாமும் எங்கு திருந்த வேண்டும் எனக் கூறுங்கள் இன்றைய சூழ்நிலையில் இம் மகிழ்வான நிலை எமக்கு மகிழ்ச்சியே. இறைவனுக்கே மகிமை உண்டாகட்டும் அவருக்கே நன்றி'' என்றார்.

பிள்ளைகளின் அணிவகுப்பு பார்த்தோரின் மனதினைக் கொள்ளைக் கொண்டன. விநோத உடைப் போட்டியில் சிறப்பானதைப் தெரிவு செய்ய நடுவர்கள் மிகச் சிரமப்பட்டதிலிருந்து அதன் சிறப்பைக் காணலாம்.

பிரதம விருந்தினர் திரு. எஸ். எக்ஸ். அன்ரன் தனது உரையில் ''தற்போது ஆணும், பெண்ணும் சேர்ந்துழைக்கும் குடும்பங்களில் இறார்களின் நிலை கவலைக்கிடமானதே. இதனை நன்குணர்ந்த யாழ். ஆதீனம் காலத்துக்கேற்ப செய்யும் பணி சிறப்பானது. ஏனைய நிலையங்களுடன் ஒப்பிடுகையில் இந் நிலையம் சிறப்பானது என்பதை இப்பிள்ளைகளின் திறமைகளே எடுத்தியம்புகின்றன. ஆரம்பத்தில் இந் நிலையம் சிறார் மூலம் சமய மாற்றம் செய்யப் போகிறது எனும் சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் இப்போது தன்னலமற்ற சேவையரல் கவரப்பட்டு தமது பிள்ளைகளை பெற்றார் போட்டி போட்டுச் சேர்க்கின்றனர் உங்கள் பணி ஓங்கட்டும்'' என்றார்.

பரிசில்களை திருமதி. அனோ அன்ரன் வழங்கினார். நன்றியுரையை செல்வி. ரி. சுபாங்கனி வழங்கினார் சனபக்குருவின் செபத்துடனும் ஆசீர்வாதத்துடனும் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

கேள்வி பதில்..

யூட்சுதர்சன்
அராலி

கே:- சுவாமி பிரேமானந்தாவிற்கு இரட்டை ஆயுள் தண்டனை கொடுத்தது சரியா?

ப:- அவர் செய்த கொடுமைகள் எண்ணிலடங்கா என்பதனை மறுக்க முடியாது. ஆனால் அரசியல் செல்வாக்கு மிகுந்த போலிச் சாமியார்களை சட்டம் ஒன்றுஞ் செய்ய முடியவில்லையே.

க. பாலசிங்கம்
நுணாவில்

கே:- இந்தியாவிலுள்ள குமுதம், ஆனந்தவிகடன் தரத்திலான பத்திரிகைகள் இலங்கையில் தோன்றாதிருப்பது ஏன்?

ப:- இலங்கையை விட இந்தியாவில் தமிழ் வாசகர்களின் தொகை மிக அதிகம் தஞ்சாவூர் போன்ற ஒரு நகரமே எத்தனையோ ஆயிரம் பிரதிகளை வாங்கி விடுகின்றது. நமது நாட்டில் மார்க்கட் இல்லாதபோது பத்திரிகைகள் எவ்வாறு வளர முடியும்?

பி. தேவதாஸ
கங்காணை

கே:- உங்களைக் கவர்ந்த சிறந்த அரசியல் தலைவர் யார்?

ப:- அன்றும் இன்றும் என்றும் ஜவகர்லால் நேரு தான்

ONE YEAR REMEMBRANCE

BORN 22 ... 06 ... 1924

DIED 31 ... 08 ... 1996

Mr. Victor Kiruipairajah Chelliah

Dearest Pappa Although
Today is Remembrance
We can only Present you
A bouquet of Beautiful memories
Sprayed with a million tears
Weare indebted to you
Beloved Thatha
For the love, aftection and Kindness,
Showered upon all of us
Your Fragrance & Sweet memories
left behind will remain
Forever with us
till we meet again
Rest dearest Thatha
Closer to out Lord Jesus

With Everlasting Gratitude & Eternal Love

Your Wife, Children
Son in laws and Grand Son.

Miss. N. Kirupairajah

House of Hope.
Inuvil,.
Chunnakam.

இளவரசி டயானா வின் மறைவு

உலகத்தையே உலுக்கி விட்ட சம்பவங்களில் ஒன்றாக இது கருதப்படுகின்றது. 36 வயதில் இந்த உலக வாழ்வை நீத்து விட்ட அழகிய இளவரசிக்காக உலகமே கண்ணீர் வடித்து நிற்கின்றது. ஆனால் இளவரசியின் துர் மரணம் உலகம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பதனை நமக்கு எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றது

முதலாவதாக பத்திரிகையாளரும், புகைப்படக்காரரும் பணத்திற்காக எவ்வளவிற்குத்தரங்குறைந்துவிட்டனர் என்பது தெரிகின்றது. இளவரசி தனது தோழனுடன் செல்லும் படங்களை எடுத்து விட்டால் கோடிக்கணக்கான பணம் குவியும் என்று இளவரசியை ஈன இரக்கமின்றிப் பின் தொடர்ந்தார்கள். அவருடைய அந்தரங்க வாழ்வில் குறுக்கிட்டார்கள் இப்புகைப் படக்காரர்களின் கழுகுக் கண்களுக்குத் தப்பவே இளவரசியின் சாரதி மின்னல் வேகத்தில் காரைச் செலுத்தி விபத்துக் குள்ளானார்.

அதே சமயம் இளவரசி டயானாவின் அகால மரணம் பிரிட்டிஷ் அரசவம்சம் எவ்வளவுக்குத் தாழ்ந்து விட்டது என்பதனையும் காட்டுகின்றது. தமது கணவர் இளவரசர் சார்ல்ஸை விவாகரத்துச் செய்துவிட்டு வேறு இளைஞர்களுடன் ஓட்டி உறவாடி பின்னர் ஓர் இஸ்லாமிய இளைஞனுடன் விடுமுறையைக் கழித்த நேரத்தில் மரணத்தைத் தழுவிக் கொண்டார் என்ற பிற்கால வரலாற்றாசிரியர்கள் இவரைப் பற்றிக் குறிப்பிடுவர்

பிரிட்டிஷ் முடியாட்சியிடம் இன்றும் மக்கள் பேரன்புடையவர்களாக இருக்கின்றனர். ஆனால், உம் எலிசபேத் மகாராணியாரின் பிள்ளைகள் தாம் நினைத்தவாறு வாழ்வது வேதனைக்குரிய விடயமாகும்.

1926ம் ஆண்டு 8வது எட்வேட் மன்னர் ஓர் திருமணமான பெண்ணை மறுமணஞ் செய்வேனென்று ஒற்றைக்காலில் நின்றான். கந்தர்புரிப் பேராயர் அவனை முடிதுறக்கச் செய்தார் இன்று கந்தர்புரிப் பேராயரும் மற்றைய திருச்சபைத் தலைவர்களும் என்ன செய்கிறார்கள் எனக் கேட்கத் தோன்றுகிறது.

பிரிட்டிஸ் முடியாட்சியைக் காப்பதில் அவர்களுக்கும் முக்கியமான பங்கு உண்டு.

வாசகர் வாசகம்

எம். என். ரட்ணம்
சாவகச்சேரி

உதயதாரகையே — நீ என்
இதயதாரகையே
என்றும் மலர்ந்திடுவாய் — நீ
இனிமை தந்திடுவாய்.

எஸ் சுசிலா
நல்லூர்

என் அன்பின் தாரகையே!
இங்குள்ள நூலகத்தில்
உன்னைத் தவறாது நான்
படிப்பேன்.
மென்மேலும் வளர
வாழ்த்துக்கள்!

ஆர். கங்காதரன்
யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் புரட்டஸ்தாந்தவரின் ஒரே பத்திரிகையாக உதயதாரகை தொடர்ந்து மிளிர்வது மகிழ்ச்சி! திருச்சபை நிகழ்வுகளை உடனுக்குடன் அறியத்தரும் தாரகைக்கு எமது வாழ்த்துக்கள்.

எஸ். ரவிந்திரன்
யாழ்ப்பாணம்

நூலகத்திற்கு உதயதாரகை கிடைக்கின்ற படியால் அதை நான் வாசித்து வருகிறேன். தாரகையில் தொடங்கிய புதிய பகுதிகள் ஜோர். கேள்வி — பதில் பகுதியில் பதிலளிக்கும் தாரகை மாமாவுக்கு எமது வாழ்த்துக்கள். அது ஒரு நல்ல பகுதி வாலிபர் சோலை இக்காலக் கிறிஸ்தவ வாலிபர்களுக்கு ஏற்றதாக உள்ளது நண்பனுக்கு வாழ்த்துக்கள். சிறார் சோலையும் நன்று- 'நிலாபதி எங்கே' தொடர்கதையைத் தவறாது வாசிக்கிறேன்- விறுவிறுப்பாக உள்ளது- 'உங்களவன்' யாராயிருப்பினும் வாழ்த்துக்கள்; எனது இக் கடிதத்தை தங்கள் தாரகையில் பிரசுரிப்பீர்களாவெனத் தெரியவில்லை ஏனெனில் நான் சந்தா கட்டுபவனல்லவே.

** ** ** *

அன்பு வாசகர்களே!

நாம் உங்கள் எண்ணக் குவியல்களைப் பிரசுரிப்பதில் பாரபட்சம் காட்டுவதில்லை. யாராயிருப்பினும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பலாம். உங்கள் கருத்துக்களை அறிய ஆவலாயுள்ளோம். இது உங்கள் பகுதி. மிளிரட்டும் உங்கள் கை வண்ணம்.

ஆசிரியர்

எழுச்சிக் கவிஞனுக்கு எழுதிய கடிதம்!

'காலப் பெருங் கருவி' யெனக் கண் திறந்து உலகத்தை
ஆளப் பிறந்திட்ட அற்புதமாய் நிலங்காணும்
'ஞானக் கவிச்சுடர்' நீ; நன்கறிவோம்!
நாமோ,
மானத் துடிப்பிழந்தே, மனிதத் தத்துவத்தின்
மூலப் பிணைப்பறுத்த முட்டாட் குலமாகி;
வேளைக் கொரு வேஷம்
விருப்பத் தோர்வாக
ஏற்றுப் பிழைக்கின்ற இனமானோம்
எனும் போதும்,
பாட்டுக் கணை தொடுத்த
பாவலவ! உன்றனது
ஏட்டைப் பிடித்தபடி ஏதேதோ கதையளந்து
வாழ்க்கைத் தேரோட்ட வாய்த்துள்ளாய்;
பிறகென்ன?!
கூட்டத்தை மிகச் சேர்த்துக்
கூவிப் பிதற்றுவதில்
நாட்டத்தைச் செலுத்துகின்ற
'நாகரிகக் கேடிகளெம்'
ஆட்டங்கள் புவிதோறும் அரங்கேறும்! அதுவல்லால்
ஏற்றங்கள் ஏதுமில்லா இழிவுற்றோம்;
எனினும் நாம்
கூச்சப்படுதல் எனுங் குணமறியோம்!
இது எங்கள்
''நேச்சர்'' எனச்சொல்லி நெஞ்சுயர்த்தித் திரிகின்ற
''பேச்சர்கள்'' எமக்காகப்
பாடிச் சிலிர்த்திட்ட
'வீச்சரிவாள் மீசை வேதியனே!' தமிழின்
ஆச்சரியக் குறியே! உன்
ஆதங்கத் துடிப்புணராப்
பேடிகளாய் போய், எங்கள்
பிறப்பினையே அவமதிக்கும்
ஊழல், பொய், களவு, உயர்பதவி வெறியாட்டச்
சூழல் என்றுலகைச் சுகயீனமுறச் செய்தே;
''நாளும் உழைத்து வரும்''
நமக்காக இன்றுவரை
வாழுங் கவிதந்த வள்ளல் உன்மனதைத்
தேற்றிக் கொள்; நாம் திருந்தோம்;
இவை
'மாற்றத்தை விரும்பா மரம்!'

ஜெ. கி. ஜெயசிலன்

Dr. மு. தங்கராசா பதவி உயர்வு

யாழ்ப்பாணம் கால் நடை வைத்தியசாலையில் கால் நடை அத்தியட்சகராக கடமையாற்றிய Dr மு. தங்கராசா அவர்கள் வடக்கு கிழக்கு மாகாண அமைச்சின் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுத் திரும்ப சென்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கால் நடை அத்தியட்சகராக கடமையாற்றிய காலகட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் கால் நடைக்குகான வைத்திய ஆலோசகராகவும் பகுதி நேர விரிவுரையாளராகவும் கடமையாற்றிய Dr. தங்கராசா அவர்கள் அளப்பெரும் சேவையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Dr. மு. தங்கராசா அவர்கள் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றதையிட்டு யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம் பெருமிதம் கொள்வதுடன் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறார்கள்.

சிறார் சோலை

அன்பான தம்பி தங்கைகளே!

ஒரு நாட்டின் அரசன் வேற்று நாட்டுப் படையெடுப்பு சீக்கிரம் நிகழப்போவதால் தனது செல்வங்களை எப்படிப் பாதுகாப்பது, தனது நிம்மதிக்கு என்ன வழி, என்றெல்லாம் தனது மனதுக்குள் யோசித்துக் கொண்டு மொட்டை மாடியில் உலாவிக் கொண்டிருந்தான். அப்போது ஒரு ஏழைக் குடியானவன் அவனது கண்ணுக்குத் தென்பட்டான். அந்த ஏழை பெருங்குரலெடுத்து மகிழ்வாக பாடிக் கொண்டு அவ்வழியே சென்று கொண்டிருந்தான். அரசன் தன் சேவகரை அழைத்து அவனைத் தன் அரண்மனைக்குள் கூட்டிக் கொண்டு வரச் சொன்னான். சேவகர் திரும்ப வந்து ''அரசே தங்களுக்கு விருப்பமெனில் தாம் இருக்கும் இடத்தில் வந்து தன்னைக் காணும்படி சொன்னான்'' என்றனர். அரசன் கீழே இறங்கி வந்து அவனிடம் சென்று – ''நீ ஏழையானாலும் எவ்வாறு உன்னால் இவ்வளவு மகிழ்வாக இருக்க முடிகிறது?'' என்று கேட்டான். ''நான் அன்றாடம் சம்பாதிப்பதை அன்றாடமே செலவழித்து விடுகிறேன். என் செல்வம் அழியும் எனும் கவலை எனக்கில்லை!'' என்றான்.

அரசன் தன் மனக் கண்ணைத் திறந்த அவனுக்கு பரிசு கொடுக்குமாறு சேவகரிடம் கட்டளை இட்டான். ஆனால் ஏழையோ ''நீங்கள் தரும் பரிசு எனக்கு வேண்டாம், நீங்கள் தரும் பரிசுகளை எப்படிப் பாதுகாப்பது எனும் கவலை எனக்குள் வந்து, என் மகிழ்வைக் கொடுத்து விடும்'' என்றார். ''ஏன் என் அழைப்பை ஏற்று மேலே வரவில்லை'' என அரசன் கேட்க, என் நாட்டு அரசன் பணியுள்ளவராக, மக்களோடு உறவாடுபவராக இருக்க வேண்டும். என் ஆசை. அப்படி இருந்தால் மக்கள் ஆதரவு உங்களுக்கு இருக்கும். படைபலம் அதிகரிக்கும், வேற்று நாட்டுப் படையெடுப்பின் அச்சமே இராது'' என்றான். வேதநாயக காஸ்திரியார் எனும் கிறிஸ்துவக் கவிஞரும் தனது இறை சிந்தையைப் பாழடித்து வரும் எனுங் காரணங்கூறி அரசரின் பெரு விலைமதிப்புள்ள பரிசுகளை ஏற்க மறுத்தது நாம் அறிந்ததே.

இயேசு சொன்னார்:- ''உங்கள் பொக்கிஷம் எங்கேயோ, அங்கேயே உங்கள் மனம் இருக்கும்''

சிறார் சிரிப்பு

(இருவர் மோட்டார் சைக்கிளில் சென்று தவறி விழுகின்றனர்)
ஒருவர்:- ''I lost my Balance''
மற்றவர்:- ''தேடிப்பாரும் கிடைக்கும்''

புதிர் நேரம்

சென்ற இதழுக்கான புதிரின் விடையை எழுதி அனுப்பியவர் –

க. யூடிற் சிவாஜினி
பெண்கள் இல்லம் சாவகச்சேரி

விடை:- ''Jesus Swept''

இந்த இதழின் புதிர்:- வேதாகமத்திலுள்ள பெரிய அதிகாரம் என்ன?

— மறு இதழில் கலக்கும் வரை —
என்றென்றும் அன்புடன்
தாரகை அண்ணா

வவனி...

தாசன் தலமையில் ஓர் வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது. இதிலே சேகரப் போதகர் அருட்திரு அன்ரனி சவரிமுத்து கல்மடு படிவம் I அ. த. க. பாடசாலை அதிபர் திரு எஸ் சசிக்குமார், கல்வித்துறை நிர்வாகி எஸ். அருணரசலம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்

இந் நிகழ்விலே சபையோர், பராமரிப்பு நிலைய பெற்றோர், இராம மக்கள் என பெரும்பான்மையானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர் நன்றியுரை பராமரிப்பு நிலைய ஆசிரியை செல்வி ஏ. அருள் ரஞ்சினியினால் கூறப்பட்டது.

★ ★ ★ ★

விசுவமடு திருச்சபை ஊழியன் அருட்திரு ஆர் ஜோன் செல்வம் உதவிக்குருவாக அபிஷேகம் பெற்றதையொட்டி அவருக்கு 05-07-97 மாலை 4-00 மணியளவில் சேகரப் போதகர் அருட்திரு எஸ் அன்ரனி சவரிமுத்து தலமையில் ஓர் வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது. இதிலே விசுவமடு மகாவித்தியாலயம் உப அதிபர் திரு அ. கனகசபை, இந்து ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி. லோகநாதன், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் ம. செல்வரத்தினம், பராமரிப்பு நிலைய சார்பில் ஆசிரியை திருமதி அ. அமலநாதன், கிராம சேவையாளர் திரு இ. இராசரத்தினம், தருமபுரம் பாடசாலை ஆங்கில ஆசிரியர் எஸ். விமலராஜா, சபையின் சார்பிலே அ. குணரட்ணம், திருமதி அன்னாள் சேகர் ஆகியோர் உரையாற்றினர்.

இந் நிகழ்வின் இறுதியிலே சபையின் செயலாளர் எட்வேட் அல்பிரட் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

மறுமைப் பிரவேசம்

திருமதி அன்ன பூரணம் அருமைநாயகம்

திருமதி. மேரி. அன்ன பூரணம் அருமைநாயகம் காலமானார். இவர் அளவெட்டித் திருச்சபையைச் சேர்ந்த காலஞ் சென்ற யேக்கப் செல்லையா அருமைநாயகத்தின் (இளைப்பாறிய நீர்பாசன இலாகா பொறியியலாளர்) மனைவியும், காலஞ்சென்ற திருமதி G. S. அருணாம்பலம், P.A. சேனாதிராசா, P W. இரத்தினம், பரிமளம் அரசரத்தினம், திருமதி. L S, செல்லத்துரை (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் சகோதரியும், A. தயானந்தன் (வட்டுக்கோட்டை அத்தியட்சர் அலுவலகம்) செல்வி கமலா, விமலா, ஈஸ்வரன் (பாக்கிஸ்தான்) சித்தரஞ்சன் (ஆலோசனைப் பொறியியலாளர் இங்கிலாந்து) ஆகியோரின் தாயாரும் சாம் செல்லத்துரை, திருமதி S தயானந்தன் (ஒய்வு பெற்ற ஆசிரியை) E. M. ஈஸ்வரன், றோகினி சித்தரஞ்சன் ஆகியோரின் மாமியும் யோய் சுகிர்தானந்தன் (கனடா) அஞ்சலினா, மகிமன், மாச்சிமா (இங்கிலாந்து) ஆகியோரின் பேத்தியுமாவர்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை யாழ்ப் பாணத்தில் தற்காலிகமாய் வசிக்கும் மகளின் இல்லத்திலும், சேமக்காலையிலும் 8-8-97ல் நகர்ப்பணி ஊழியன் P. J. சூரியகுமார் அவர்களால் நடத்தப் பட்டது

படு..

கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

''அரசாங்கத்தின் காவலில் இருந்த வேளை வண. அருள்பாலன் மரணமடைந்திருப்பதைக் கேள்வியுற்ற நாம் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம். அவர் மற்றொரு மதத்தைச் சார்ந்த மதகுருவானாலும், துரதிஷ்டவசமாக இச்சம்பவம் இயற்கையாகவே எந்த மதத்தை பின்பற்றுகிறவர்களுக்கு மேலெழுப்புணர்வை ஏற்படுத்துவதாகும். பாதுகாப்பு, விசாரணை என்ற போர்வையில் இந்து மதகுருமார் எதிர் நோக்கும் இம்சைகள் குறித்துத் தங்கள் கவனத்துக்கு நாம் கொண்டு வந்திருந்தோம்.

ஆயுதப்படையினரால் கைது செய்யப்படும் ஒவ்வொருவரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். தமிழர்கள் என்ற காரணத்துக்காக அவர்கள் மீது தொடர்ச்சியாகப் பாரதூரமான வகையில் இடம் பெற்றுவரும் இம்சைகள், அடிப்படை உரிமை மீயல்களுக்கு இந்தச் சம்பவம் ஓர் உதாரணம் என வலியுறுத்திக் குறிப்பிட்டுக் கூறும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இத்தகைய மனோபாவத்தைக் தங்கள் அரசாங்கம் நிறுத்த வேண்டும். அத்துடன் உடனடியாக இத்தகைய நிலைமைகளுக்கு உகந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்'' இவ்வாறு அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது

பிரவேசம்

திரு. பொ. திவ்வியநேசன்

சாவகச்சேரியைச் சேர்ந்தவரும் இங்கிலாந்தில் வசித்து வந்தவருமாகிய திரு. பொன்னு சரவணமுத்து திவ்வியநேசன் சென்ற வியாழக்கிழமை (21-08-97) மறுமைக்குள் பிரவேசித்தார். இவர் சுண்டிக்குளியைச் சேர்ந்த ஞானசோதி தம்பித்துரை திவ்விய நேசனின் கணவரும், நோவல்லா, மைக்கல் ஆகியோரின் தந்தையும்; நமது பேராயர் அதி வண. ஜெபநேசனின் ஒன்று விட்ட சகோதரருமாவார். இவர் பேரில் ஒரு ஞாபகார்த்த செபக் கூட்டம் சாவகச்சேரியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் கடந்த சனிக்கிழமை (30-08-97) நடைபெற்றது. இவ்வாராதனையைப் பேராயர் அவர்களே நடாத்திப் பிரசங்கம் செய்தார்.

■

திருமதி. திரவியமலர்

சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி. திரவியமலர் இரத்தினராசா சென்ற ஞாயிற்றுக் கிழமை 24-8-97 கொழும்பில் இருந்த போது மறுமைக்குள் பிரவேசித்தார். இவர் சாவகச்சேரி நகரசபைப் பிதாவாகவும், சாவகச்சேரித் திருச்சபையின் செயலாளராகவும் நீண்ட காலம் பணியாற்றிய திரு. S. K. திரவியநாயகம் அவர்களினதும் திருமதி திரவியநாயகம் அவர்களினதும் மகள் என்பது குறிப்பிடத்தக்கது.

தாரகையின் கண்டனம்

எம்முடைய சொந்த மதகுருமார்களில் ஒருவரான திரு. ஜே. அருள்பாலன் கொலை செய்யப்பட்டது குறித்து நாம் ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைகிறோம். இத்தகைய மரணங்கள் மனிதத்தை மதிக்கும் எவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தும், இவ்வாறான மரணங்கள் இறைவனது பார்வையில் கூட வெறுப்புக்குரிய ஒன்றாகவே இருக்கும்.

'நெருப்புத் தழலை'த்தலை மீது குவித்துக்கொண்டு கதறிக் கொண்டிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும், இத்தகு சம்பவங்களால் பாதிக்கப்படும் ஏனையோர்க்கும் இத்தகு மரணங்கள் கூறும் பதில் என்ன?

சமாதான விரும்பிகளாக வாழும் மக்களுக்கு இலை கூறும் செய்திதான் என்ன? 'அடக்கஞ் செய்யக்கூட அவகாசமற்ற' தென ஒரு அப்பன் வர்ணிக்கும் இத்தகு செயல்கள், சமாதானம் என்பது எட்டாக்கனியா? எனவே மக்களை எண்ண வைக்கும். மிகுந்த வெறுப்புக்குரியதாகவும், கண்டனத்துக்குரியதாகவும் உள்ள இத்தகு செயல்களை 'உதயதாரகை' வன்மையாகக் கண்டிக்கிறது. சம்மந்தப்பட்டவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து, இனியும் இத்தகு துர்ப்பாக்கியமான மரணங்களை தடுத்து நிறுத்த வேண்டுமென தாரகை எதிர்பார்க்கின்றது.

இதே வேளை புது முறிப்பில் 9ம் திகதி வண. அருள்பாலனின் சடலம் கண்டெடுக்கப்பட்டதென சர்வசே செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிகாரியான ஆன் லூயிஸ் லாஸொட் உறுதி செய்துள்ளார்.

இப்பத்திரிகை வட்டுக்கோட்டை ஆதினக் காரியாலயத்தில் உள்ள அமெரிக்கன் இலங்கை மிஷன அச்சகத்தில் உதயதாரகை முகாமையாளர் சகோ பி. தேவதாஸ் அவர்களால் 1997 ஆம் ஆண்டு செப்டெம்பர் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.